

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக புதிதாக அமைக்கப்பட்ட வார் ரூமை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் திறந்து வைத்தார். உடன் மு.பகலவன், எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், பி. வெங்கடாஜலபதி, கே.எஸ்.மணி, டாக்டர்.கே.பரிமளம், ஆ.ராஜா, கி.வே.ஆனந்தகுமார் , டி.கே. சந்திரசேகர் ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், நா.செல்வசேகரன், மு.முரளிதரன் ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், பி.முத்து கா.சு.தமிழ்உதயன், உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ சிறப்புரை!

# தாம்பரம் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## இ.கருணாநிதி - வசந்தகுமாரி - கோ.காமராஜ் பங்கேற்பு! மாடம்பாக்கம் ஆ.நடராஜன் நிகழ்ச்சி ஏற்பாடு!

காஞ்சிபுரம், ஜுன். 17

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா முன்னிட்டும், கழக அரசின் 4 ஆண்டு அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (17.06.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, படுவஞ்சேரி, மப்பேடு சந்திப்பு அருகில் நடைபெற உள்ளது.

தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர், நகரமைப்புக் குழுத் தலைவர், மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்கிறார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, தாம்பரம் மாநகரச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பருதி இளம் சுருதி, சேலம் சுஜாதா, நாகம்மை கருப்பையா, எஸ்.இந்திரன், திருநீர்மலை த.ஜெயகுமார், ஆதிமாறன், இரா.சுரேஷ், ஆ.தமிழ்மாறன், வ.விஜயரங்கன், எஸ்.சதிஷ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், கோல்ட் பிரகாஷ், பேராசியர் எல்.பிரபு, வீ.ரவிச்சந்திரன், பி.கே.ஏ.சத்தியபிரபு, ரமணி ஆதிமூலம், விக்கி (ஏ) விக்னேஷ், பொன்.சதாசிவம், ஜெ.சத்தியசீலன், வி.ஜெயராமன், இ.எம்.சாம்சன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ரா.நவீன்,

ஆர்.பன்னீர்செல்வம், ஜெ.செல்வம், எஸ்.வேலவன், பொ.செந்தில்குமார், எம்.செந்தில்குமார், உமாதேவி செந்தில்குமார், மா.பாரதி, சி.கார்த்திகேயன், எஸ்.தீபன்குமார், எம்.கண்ணன் (ஏ) சாந்தகுமார், எம்.பெருமாள், எம்.கே.மோகனரங்கன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டம் மற்றும் மாவட்ட துணை, நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப் படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப் பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**சென்னை வடக்கு மாவட்டம்**

சென்னை வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **ஜி.பி.மோகன் பாபு** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

திருப்பூர் கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **க.உ.செந்தில் குமார்** MBA அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக காங்கேயம் தொகுதி (களப்பணி) **சு.கதிரவன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்)**பா.தனசேகர்**அவர்கள்நியமிக்கப்படுகிறார்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

திருப்பூர் தெற்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக மடத்துக்குளம் தொகுதி (களப்பணி) **சி.மாரிச்சாமி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர் பிரிவு) முனைவர் **தி.கிருஷ்ணவேணி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

சென்னை டி.எம்.எஸ்.வளாகத்தில் நடைபெற்ற விழாவில்

# நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜுன்.17-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (16.06.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 சேவை மையத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 104 மருத்துவ தகவல் மையம் தொடங்கி, நீட் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டத்தை தொடர்ச்சியாக 4 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் நீட் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கும், நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவப் பாடத்திற்கு இடம் கிடைக்காத மாணவர்களுக்கும் மனநல ஆலோசனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 12ஆம் வகுப்பு தேர்விலும் கூட தேர்ச்சி பெறாத மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

104 ஆலோசனை மையத்தை பொறுத்தவரை, மனநல ஆலோசனைகள் வழங்குவது என்பதையும் கடந்து மாணவர்களுக்கு எதிர்கால கல்விக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறதோ, எதைப்படித்தால் வாய்ப்புகள் இருக்கிறது என்பது குறித்தான விளக்கங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் 1,35,715 பேர், இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 76,181 பேர், தேர்ச்சி பெறாத மாணவர்கள் 59,534 பேர், முதல் கட்டமாக 80 மனநல ஆலோசகர்களை கொண்டு 2 Shiftகள் என்கின்ற வகையில் இன்று மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

80 மனநல ஆலோசகர்கள் இந்த பயிற்சியினை தொடங்கி இருக்கிறார்கள். காலையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் ஏறக்குறைய 600 மாணவ, மாணவியர்களை தொடர்பு கொண்டு பேசப்பட்டிருக்கிறது. அதில் 30% பேர் இணைப்பு கிடைக்கப் பெறாத நிலையில் இணைப்பு கிடைக்கப் பெற்ற 70% என்கின்ற வகையில் மாணவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

மாணவர்களிடத்தில் நீட் தேர்வு தேர்ச்சி பெற தவறியிருந்தாலும், அடுத்தடுத்த வாய்ப்புகள் இருக்கிறது, மீண்டும் இதே தேர்வு சந்திக்கும் நிலை இருக்கிறது. எனவே மனம் தளராமல் உங்களுடைய படிப்பை தொடர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. அதேபோல் பெற்றோர்களிடத்திலும் கூட பிள்ளைகளிடம் அதிகம் உணர்ச்சிவசப்படக்கூடாது, அதிகமாக கோபப்படகூடாது, குழந்தைகளிடம் பதட்டத்தை ஏற்படுத்தக் கூடாது என்று பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று அந்தப் பயிற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. 59,534 பேர் இலக்கு என்கின்ற வகையில் இந்தப் பயிற்சி தொடங்கப்பட்டிருந்தாலும், தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 76,181 பேர், தேர்ச்சி பெற்ற இவர்களுக்கு மருத்துவ இளங்கலை படிப்புகளுக்கு மட்டும் 11,850 பேருக்கு மட்டுமே வாய்ப்பு. தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் என்று 75 இருக்கின்றது. இந்த 75 மருத்துவக் கல்லூரிகளிலும் இளங்கலை மருத்துவப் படிப்புகளுக்கான வாய்ப்பு 11,850 பேருக்கு மட்டுமே. அதோடுமட்டுமல்லாமல் MBBS எனும் மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து வெவ்வேறு வாய்ப்புகளும் இருக்கிறது என்று அறிவுறுத்தப்படுகிறது.

குறிப்பாக பல் மருத்துவம், நர்சிங், பாரா மெடிக்கல் என்று ஏறத்தாழ 20,000த்திற்கும் மேற்பட்ட படிப்புகளில் சேர்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் கால்நடை மருத்துவம் போன்ற பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. அதோடு மருத்துவத்துறையிலேயே இந்திய மருத்துவம் என்று சொல்லக்கூடிய சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி போன்ற படிப்புகளையும் நீங்கள் தொடரலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. நீட் தேர்வு இல்லாமலேயே நேரடியாக 12ஆம் வகுப்பு மதிப்பெண்களை வைத்து சேரக்கூடிய யோகா போன்ற பட்டப்படிப்புகள் இருக்கின்றது.

எனவே மாணவர்களின் மனநலனை இன்றைக்கு திடப்படுத்திடும் வகையில் அடுத்தடுத்து இருக்கும் வாய்ப்புகள் அவர்களுக்கு அறிவித்திடும்வகையிலும் ஒரு முயற்சியாக மனநல ஆலோசனை பயிற்சி தொடங்கப்படுகிறது.

மேலும் மாணவர்களுக்கு எந்த மாதிரியான மனநல ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளது என்றால் தனிமையை தவிர்த்துக் கொள்ள வேண்டும், மற்றவர்களிடத்திலிருந்து விலகி இருப்பதை குறைத்துக் கொள்ள வேண்டும், தூக்கமின்மை, பசியின்மை, தற்கொலை முயற்சி, தற்கொலை எண்ணம், தொடர்ந்து அழுதுக் கொண்டிருப்பது, அதிகமாக கோபம் கொண்டு அருகில் இருப்பவர்களிடம் பேசுவது என்று பயத்தோடு, பதற்றத்தோடு இருக்கும் மாணவர்களை நிதானப்படுத்துவதோடு, அவர்களுக்கான மன அமைதியை ஏற்படுத்துகின்ற வகையில் இந்தப் பயிற்சி பயன்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு. இராஜமூர்த்தி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

டி.ஆர்.பாலு எம்.பி- அமைச்சர் தா.மோ. அன்பரசன்- நெல்லிகுப்பம் புகழேந்தி-ரிஷி சந்தோஷ் சிறப்புரை!

# பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்! நலத்திட்ட உதவிகள்!

## வே.கருணாநிதி தலைமையில் இ.கருணாநிதி - எஸ். ஆர்.ராஜா பங்கேற்பு!

சென்னை ஜுன்:17

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் 4- ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி தலைமையில் பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் அருகில் நாளை (18-06-2025) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது.

இவ்விழாவில் 6வது வட்ட கழக செயலாளர் வி. எஸ்.ஜெகநாதன், கல்யாணி டில்லி எம்.சி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு,பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், பகுதி பொருளாளர் ஆர். உமாசங்கர்,பகுதி துணை செயலாளர் என்.பன்னீர் செல்வம், பா. கவிதா, துரை இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன், என். கே.ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு,ரா.கோகுல், சு.மனோகரன் க.சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் கூட்டத்தில் கழக பொருளாளர் கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமை கழக இளம் பேச்சாளர் ரிஷி சந்தோஷ், இ.கருணாநிதி எம். எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம் எல் ஏ ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இதில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது ,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி. ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்திய பிரபு,தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா. செல்வம்,முன்னாள் பேரூர் செயலாளர் பி.எஸ் ரவி, வட்டக் கழக செயலாளர்கள் அனிஸ்டன், மு.இன்பசேகர், காந்தி, முகமது அப்பாஸ்,சுகுமாரன்,ஸ்ரீதர்,

மாமன்ற உறுப்பினர்கள் மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன் உள்ளிட்ட பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA-2), கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்கின்றனர்.



எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண்.58 மற்றும் 99க்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு கட்டுமானப் பணிகள் மற்றும் இதரப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஆய்வு மேற்கொண்டார். இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மாதவரம் வடக்கு பகுதியில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137 வது பிறந்த நாளை முன்னிட்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தியாகியின் திருவுருவப்படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தியாகி விஸ்வநாததாஸ் நகர் சங்க தலைவர் சி. மூர்த்தி தலைமையில், 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. பாலாஜி, எம். ஜான்சன், ஜி. சுரேஷ் ஆகியோர் முன்னிலையில், நகர நிர்வாகிகள் ஈஸ்டர் ராஜ், கலைமணி, சங்கர், ஏகாம்பரம், சுகந்தி, தீபலட்சுமி, அண்ணாமலை, குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

# கோவில்பட்டி வடக்கு, கோவில்பட்டி மேற்கு, கோவில்பட்டி மத்திய - விளாத்திகுளம் கிழக்கு, விளாத்திகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

# மற்றும்

# கோவில்பட்டி கிழக்கு, கோவில்பட்டி மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி நகரம் மற்றும் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் இரண்டாக பிரிக்கப்படுகிறது. கோவில்பட்டி மத்திய மற்றும் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் மறுசீரமைக்கபட்டு மூன்றாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கபட்ட கழக அமைப்புகளுக்கு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் – நகரங்கள் பின்வரும் வார்டுகளை கொண்டதாகவும் அமையும்.

**ஒன்றியங்கள்**

**கோவில்பட்டி வடக்கு ஒன்றியம் :** 1. ஆவல்நத்தம், 2. சத்திரப்பட்டி, 3.இடைசெவல், 4. இனாம்மணியாச்சி, 5. மூப்பன்பட்டி, 6.முடுக்குமீண்டான்பட்டி, 7. தோணுகால், 8. வில்லிசேரி ஆகிய 8 ஊராட்சிகள்.

**கோவில்பட்டி மேற்கு ஒன்றியம் :** 1. கிழவிப்பட்டி, 2. மந்திதோப்பு, 3.நாலாட்டின்புதூர், 4. பாண்டவர்மங்கலம், 5. ஊத்துபட்டி ஆகிய 5 ஊராட்சிகள்.

**கோவில்பட்டி மத்திய ஒன்றியம் :** 1. தீத்தாம்பட்டி, 2. துறையூர், 3.இலுப்பையூரணி, 4. கொடுக்காம்பாறை, 5. குலசேகரபுரம், 6.லிங்கம்பட்டி, 7. சிவந்திபட்டி, 8. திட்டங்குளம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் :** 1. மந்திகுளம், 2. வேம்பார், 3.வேம்பார் தெற்கு, 4. பெரியசாமிபுரம், 5. குளத்தூர், 6. வைப்பார், 7. கீழவைப்பார், 8. எம். சண்முகபுரம் ஆகிய 8 ஊராட்சிகள்

**விளாத்திகுளம் தெற்கு ஒன்றியம் :** 1. அரியநாயகிபுரம், 2. தத்தநேரி, 3.எம். குமாரசக்கணாபுரம், 4. கே. தங்கம்மாள்புரம், 5. சூரங்குடி, 6.மேல்மாந்தை, 7. விருசம்பட்டி, 8. பூசனூர், 9. புளியங்குளம், 10.நெடுங்குளம், 11. வி.வேடப்பட்டி ஆகிய 11 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **கோவில்பட்டி வடக்கு, கோவில்பட்டி மேற்கு, கோவில்பட்டி மத்திய – விளாத்திகுளம் கிழக்கு, விளாத்திகுளம் தெற்கு,** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவில்பட்டி வடக்கு ஒன்றியம்: பொறுப்பாளர்: கு.ஜெயக்கண்ணன்**

**கோவில்பட்டி மேற்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: கி. ராதாகிருஷ்ணன்**

**கோவில்பட்டி மத்திய ஒன்றியம் : பொறுப்பாளர்: வீ. முருகேசன்**

**விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: த. சின்னமாரிமுத்து**

**விளாத்திகுளம் தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: இம்மானுவேல்**

**நகரங்கள்**

**கோவில்பட்டி கிழக்கு நகரம் :** 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 23, 24, 25, 26, 32, 33, 35, 36 ஆகிய 16 வார்டுகள்.

**கோவில்பட்டி மேற்கு நகரம் :** 1, 2, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 27, 28, 29, 30, 31, 34 ஆகிய 20 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **கோவில்பட்டி கிழக்கு, கோவில்பட்டி மேற்கு** ஆகிய நகரக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவில்பட்டி கிழக்கு நகரம் : பொறுப்பாளர்: மு. சுரேஷ்**

**கோவில்பட்டி மேற்கு நகரம் : பொறுப்பாளர்: கா.கருணாநிதி**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.